[10th April 1958

திட்டப்படி கேட்கவில்லையா, அல்லது அவர்கள் திட்டப்படி ஒதுக்கவில்லையா ? " நான்-அக்ரிகல்சுரல் கோட்டா " வைத் தவிர மற்றவைகள் விஷயத்தில் பாபுலேஷன் பேசிஸ் இல்லையா ?

THE HON. SRI R. VENKATARAMAN : ஒவ்வொரு கோட்டா விற்கும் ஒரு பேசிஸ் இருக்கிறது. உதாரணமாக " ஸ்மால் ஸ்கேல் இன்டஸ்ட்ரீஸ் " கோட்டா தேவை என்ன என்று கணக்கிட்டு அதைப் பார்த்து அந்த பேஸில் அலாட் செய்யப்படுகிறது. " அக்ரிகல்சுரல் " கோட்டா, அதைப்போல நம்முடைய தேவை என்ன என்று கணக்கிட்டுக் கொடுக்கப்படுகிறது. " நான்-அக்ரிகல்சுரல் " கோட்டா பாபுலேஷன் பேஸில் கொடுக்கப்படுகிறது. நமது இந்திய நாட்டிலே அயர்ன் அண்டு ஸ்டீல் குறைவாக இருக்கிறது. அந்தக் காரணத்தினால் எல்லா மாகாணத் திற்கும் கிடைக்கவேண்டுமென்று கோட்டா வைத்திருக்கிறார்கள்.

SRI N. MAHALINGAM : குறைந்த அளவு ஸ்டீல் வரக் கூடிய இந்த சந்தர்ப்பத்திலே, கொடுக்கக்கூடிய கோட்டா ஸர்ட்டிபிகேட் வைத்திருந்தும் வருஷக்கணக்காக கிடைக்காது இருக்கிறது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? இந்தக் குறையை நீக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்திருக்கிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : அது எனக்கு நன்றாகத் தெரியும். இப்போது தேவையான அளவுக்கு கோட்டா நமக்கு கிடைக்கவில்லை. கொடுத்த கோட்டா ஸர்ட்டிபிகேட்டுக்குக்கூட கிடைக்க வில்லை. 1960-க்குள் ஒரு ஸ்டீல் பிளாண்ட் உற்பத்திக்கு வருமானால் நாம் இந்தப் பிரச்னையை ஓரளவுக்கு சமாளிக்க முடியும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Will the Hon. Minister tell us whether there is any proposal to renew their request to the Central Government and satisfy the demands of the public, especially the agriculturists, because they are the most hard hit in this respect?

THE HON. SRI R. VENKATARAMAN : Government are making all possible efforts to secure as high a quota as possible but the allotment is limited by the exigencies of availability.

SRI D. S. AUTHIMOOLAM : ஸார், இந்த ஸ்டீல் கோட்டா நியாயமாக பாக்டரி வைத்திருப்பவர்களுக்குக் கிடைக்காமல், பிளாக்மார்க்கெட்டில் ஜாஸ்தியாக வியாபாரம் செய் ப்படுவது சர்க்காருக்குத் தெரியுமா ? ஜில்லா வாரி அடிப்படையில் கொடுக்க அரசாங்கம் பரிசீலனை செய்யுமா ?

MR. SPEAKER : The first part of the question contains an insinuation. The second part of the question is only a suggestion. Therefore I rule the question out of order.

Uplift of Harijans

* 688 *Q*.—SRI P. G. MANICKAM.—Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the amount allotted in 1957–58 for award of prizes for prominent persons who did service for the uplift of Harijans; and

(*b*) the number of persons to whom prizes were awarded in each district?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Rs. 6,500.

(*b*) The list of awardees has not been finalised yet.

10th April 1958]

Sri P. G. MANICKAM : ஸார், கலப்பு மணம் செய்து கொள்ளும் உயர்ந்த ஜாதியினருக்குப் பரிசு கொடுக்க அரசாங்கம் கவனிக்குமா ?

Mr. SPEAKER : இதற்குத் தனியாக ஒரு கேள்வி போடவேண்டும்.

Market Committees

* 689 *Q.*—Sri K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of Market Committees in each district?

(*b*) the amount of business transacted in 1956 and 1957; and

(*c*) the main commodities marketted through these committees?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) A single market committee is constituted for a district. There are committees in South Arcot, North Arcot, Coimbatore, Tiruchirappalli, Tirunelveli and Ramanathapuram districts.

(*b*) The amount of business transacted in all the regulated markets was to the value of about Rs. 501 lakhs during 1956, and about Rs. 602 lakhs during 1957.

(*c*) The commercial crops marketted were cotton, groundnut and gingelly.

Sri K. SATTANATHA KARAYALAR : திருநெல்வேலி மார்க்கெட் கமிட்டி எந்தெந்த அக்ரிகல்சரல் பிராட்யூஸில் வியாபாரம் செய்கிறார்கள் ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : பருத்தி வியாபாரத்திலே கவனம் செலுத்தி வருகிறார்கள்.

Sri V. K. RAMASWAMY MUDALIYAR : மற்ற ஜில்லாக்களில் இந்த கமிட்டி எப்போது அமுலுக்கு வரும் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : ஜில்லாக்களில் அமுலுக்குக் கொண்டு வருவதைவிட மற்ற பயிர்களுக்கும் இதை அமுலுக்குக் கொண்டுவரலாமென்று யோசனையில் இருக்கிறது. இது நிபுணர்கள் கமிட்டியின் சிபாரிசுக்கு அனுப்பப்பட்டுவிட்டது. சிபாரிசு வந்தவுடன் சட்டத்தை மாற்றவேண்டியிருக்கும். அதை எவ்வளவு சீக்கிரமாகச் செய்யமுடியுமோ அவ்வளவு சீக்கிரமாக செய்ய முயற்சிக்கப்படும்.

Sri A. GOVINDASAMY : தென் ஆற்காடு ஜில்லா மணிலா மார்க்கெட் கமிட்டி வியாபாரத்தை கவனிப்பதோடு நல்ல விதைகள் வழங்கி வந்தார்கள். அது இப்போது நிறுத்தப்பட்டுவிட்டது. மறுபடியும் நல்ல விதைகள் வழங்க ஏற்பாடு செய்வார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : நல்ல விதைகள் வழங்க வேண்டியதன் அவசியத்தை அரசாங்கம் உணருகிறது. அது விஷயத்திலும் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

Sri R. KRISHNASWAMI NAIDU : ராமநாதபுரம் மார்க்கெட் கமிட்டி செயல்பட்டு வருகிறதா அல்லது கோர்ட் அப்பீல் காரணமாக செயல்படுவது நிறுத்தப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.